செ.வெ.எண்: 300 நாள்: 05.05.2020

**தொடக்கக்கல்வி ஆசிரியர்கள் சார்பில் 2832 மாணவர்களின் குடும்பத்தினருக்கு ரூபாய் 15 லட்சம் மதிப்பிலான நிவாரண உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் வழங்கினார்**

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், பசுபதிகோயில் தூய கேபிரியல் பள்ளியில் தொடக்கக்கல்வி ஆசிரியர்கள் சார்பில் அவர்கள் பணிபுரியும் பள்ளியில் படிக்கும் ஏழை எளிய மாணவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று (05.05.2020) வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்ட தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் 103 தலைமையாசிரியர்கள், 312 ஆசிரியர்கள் மற்றும் 17 பணியாளர்கள் தங்கள் பள்ளியில் பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய 2832 மாணவ - மாணவியர்களின் குடும்பத்தினருக்கு ரூபாய் 15,27,650 திரட்டி அரிசி மற்றும் அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் வழங்கும் நிகழ்வினை பசுபதிகோயில் தூய கேப்ரியல் பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

தஞ்சாவூர் மாவட்டத்தில் கொரோனா நோய் பரவாமல் தடுப்பதற்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் முழுவீச்சில் எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்ட நிர்வாகம் மற்றும் தன்னார்வலர்கள் மூலம் பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த தொடக்கக் கல்வித்துறை தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் 436 பேர் சுமார் 15 லட்சம் நிதியை திரட்டி, தங்கள் பள்ளியில் படிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களின் குடும்பத்தினர் 2832 பேருக்கு அரிசி மற்றும் அத்தியாவசிய மளிகை பொருட்களை வழங்கியுள்ளனர்.

மேலும், கட்டுப்பாட்டு அறைக்கு கிடைக்கப்பெறும் தகவலின் அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் மற்றும் ஏழை குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. மதிய உணவு சமையற்கூடங்கள், கோவில் சமையற்கூடங்கள், அங்கன்வாடி சமையற்கூடங்கள் மற்றும் இதர சமுதாய சமையற்கூடங்கள் மூலமாக நாள்தோறும் சுமார் 20,000 நபர்களுக்கு உணவளிக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை 58 பேருக்கு கொரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டு, 43 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். மீதமுள்ள 15 பேர் நல்ல நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சென்னையிலிருந்து தஞ்சாவூர் மாவட்டத்திற்கு பிரதான சாலைகள் அல்லாமல் பிற சாலைகளில் வருகின்றனர். அவர்களின் விபரங்களை பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் 1077 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விவரங்கள் குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும். இதன் மூலம் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க முடியும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.இராமகிருட்டிணன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

பின்னர், மானாங்கோரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாய விலை கடையில் ஊரடங்கு உத்தரவினால் தடையின்றி அத்தியாவசிய பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு, அரிசியின் தரம் ஆகியவை குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்து, பதிவேடுகளை பார்வையிட்டார். அப்போது கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திரு.ஏகாம்பரம் அவர்கள் உடன் இருந்தார்.

பின்னர், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தன்னார்வலர்கள் சார்பில் கொரோனா நிவாரண உதவியாக 500 கிலோ அரிசியை 20 பைகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார். தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக வைப்பறையில் தன்னார்வலர்கள் மற்றும் சமூக தொண்டு நிறுவனங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற கொரோனா தடுப்பு நிவாரண பொருட்கள் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் பார்வையிட்டார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.